# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## *2018 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 09 ஆம் திகதிய*
## பகுதி II இற்குக் குறைநிரப்பி

*(2018.03.12 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

## தேசிய பாதுகாப்பு நிதியம் (திருத்தம்)

***1985 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு நிதியச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*பாதுகாப்பு அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

***வாசகம் 2:*** *இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1985 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு நிதியச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது சபை உறுப்பினர்களை மாற்றுவதாகும்.*

***வாசகம் 3:*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், இது 3 ஆம் பிரிவுக்கான திருத்தத்தின் விளைவாந்தன்மையினதாகும்.*

***வாசகம் 4:*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது "தேசிய பாதுகாப்பு" என்னும் சொற்களைப் பதிவிடுவதாகும்.*

*ச.வ.–ஒ 34/2017*

**1985 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு நிதியச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்.

***1*.** இச்சட்டம், 2018 ஆம் ஆண்டின்  ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு நிதியம் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*1985 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்கச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

***2*.** ஆயிரத்துத்தொளாயிரத்து எண்பத்தைந்தாமாண்டின் 9 ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு நிதியச் சட்டத்தின் (இது இதனகத்துப் பின்னர் “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 3 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் பந்திகள் (அ) மற்றும் (ஆ) என்பவற்றை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும்:-

“(அ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள்:-

(i) குடியரசின் சனாதிபதியின் செயலாளர்;

(ii) பாதுகாப்பு என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சு செயலாளர்; அத்துடன்”;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியை (ஆ) என்னும் பந்தியாக மீள இலக்கமிடுவதன்மூலமும்; அத்துடன்

(3) மூன்றாம், (4) ஆம் உட்பிரிவுகளில் “உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின்கீழ்” என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக “உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ்” என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 6ஆம் பிரிவானது, “சனாதிபதியே” என்னும் சொல்லுக்குப் பதிலாக “குடியரசின் சனாதிபதியின் செயலாளரே” என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு “நிதி” என்னும் சொல்லுக்குப் பதிலாக “தேசிய பாதுகாப்பு” என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**5.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.